**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ. வெ. எண். 106** **நாள்: 21.05.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (21.05.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் பணிச்சுமையிலிருந்து விடுபடவும், புத்துணர்ச்சி பெறவும், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் 10.03.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 25.03.2025 வரை நடைபெற்றது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களில் 1,670 ஆண்கள், 1,074 பெண்கள், 55 மாமன்ற உறுப்பினர்கள் என 2,799 நபர்கள் பங்கேற்றனர். இதில், பல்வேறு போட்டிகளில் 559 நபர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இதில் கேரம் (Carrom), சதுரங்க ஆட்டம் (Chess), கால்பந்து (Football), டென்னிகாய்ட் (Tennikoit), எறிபந்து (Throw ball), கோ-கோ (Kho-Kho), டேபிள் டென்னிஸ், கைப்பந்து, கபடி போட்டிகள், இறகுப்பந்து (Shuttle Badminton), தடகளப் போட்டிகள், கயிறு இழுத்தல் மற்றும் Lucky Corner போட்டிகள், நீச்சல் போட்டி மற்றும் கிரிக்கெட் போட்டிகள் உள்ளிட்ட 17 பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (பணிகள்) திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் திரு.த.விசுவநாதன் (கல்வி), திரு.தா.இளையஅருணா (நகரமைப்பு), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர் திரு.நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பிருந்தா ஸ்ரீ, திரு.இளம் சுருதி, திரு.சங்கர் கணேஷ், திரு.கமல், திருமதி தேவி கதிரேசன், திருமதி பவித்ரா, திரு.சரவணன், திருமதி துர்கா, திரு.பா.சுப்பிரமணி, திருமதி அமிர்தவர்ஷினி, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**